★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 12உ புதன் (25—1—56) ★ ★ வெளியூர்: தை 13உ வியாழன் (26—1—56) [இதழ் 19]

எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்களோ?

[illegible]

எந்தர்களும், ஏமாற்றுக்காரர்களும் எப்படியெல்லாம் [illegible] இல் மக்களை ஏய்க்கிறார்கள்—தாங்கள் வாழ [illegible] வாழ்வைப் பறிக்கிறார்கள் என்பதற்குச் சான்றுகள் [illegible] கிடைக்கின்றன.

"'இந்திய பால் சமாஜ்' என்ற நிறுவனத்தின் செயலாளர் நான்தான்" என்று கூறிக்கொண்டு ஒரு இளைஞர், [illegible] முதல் தேதியன்று இரண்டு 'இலவசத் தங்கப் பள்ளிகளைத்' திறந்தாராம். அவர் எட்டு ஆசிரியைகளை நியமித்ததுடன், 200 பிள்ளைகளையும் பள்ளியில் சேர்த்துக்கொண்டாராம்—[illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

நேருவின் செல்வாக்கு இதுதானா?

புது மாநில அமைப்பில் டில்லியின் குழப்பம்

நிமிடத்திற்கு ஒரு யோசனை; விநாடிக்கு ஒரு திட்டம்!

பெரிய மனிதர்கள் விபரீதப்போக்கு

பணமும் நேரமும் பாழாகும் விபரீதம்

மாநிலப் புது அமைப்பு என்ற பெயரால் டில்லி ஏகாதிபத்தியவாதிகள் நடத்திவரும் திருவிளையாடல்கள், எங்கே போய் நிற்கப்போகின்றனவோ தெரியவில்லை; எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கிறது.

வேளைக்கு ஒன்றை நினைக்கிறார்கள்—பொழுதிற்கு ஒன்றைக் கூறுகிறார்கள். நேற்றுக் கூறிய திட்டங்கள், செய்திகளாக நாட்டு மக்களுக்குக் கிடைப்பதற்கு முன்னதாக, மறுநாள் வேறொரு திட்டம் பற்றிப் பேசுகிறார்கள். ஒவ்வொரு திட்டத்தைப் பற்றியும் இந்த 'நானேராஜா'க்கள் கூறும்போதும், —'ஆமாம், ஆமாம்' இதுவே உகந்தது; உயர்ந்தது; ஒப்பற்றது; சரியானது'—என்று கூறும் 'தலையாட்டி'கள், மந்திரிகள் என்ற பெரும் பொறுப்புள்ள பதவிகளை வகித்துக்கொண்டு, அந்தப் பதவிகளுக்கு இழிவையும் பழியையும் தேடித் தந்துகொண்டிருக்கிறார்கள்.

டில்லி 'பெரிய மனிதர்'கள் தங்களுக்கு உலக அரங்கில் கிடைத்துவருவதாக நம்பிக்கொண்டிருக்கும் 'உயர்ந்த இடத்தை'ச் சுட்டிக்காட்டி, பல மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பிலிருப்பவர்களையும் 'தங்கள் சித்தம்—எங்கள் பாக்கியம்' என்று கூறிடும் 'ஆமாம் சாமி'களாக்கி வருகின்றனர்.

டில்லி பீடத்தவரின் போக்கில் மலிந்து கிடக்கும் பயங்கரமான விளைவுகளைச் சுட்டிக்காட்டி மக்களை விழிப்புடனிருக்குமாறு தூண்ட வேண்டிய கடமையுடைய பத்திரிகைகளும், டில்லியாரின் போக்கே சரியானது என்பதற்குப் புதிய வாதங்களைத் தேடித்தரும் மிகப் பிற்போக்கான வேலையில் ஈடுபட்டிருக்கின்றன.

11 மாகாணங்களாக வெள்ளையன் விட்டுச்சென்ற இந்தியத் துணைக்கண்டம் 27 ராஜ்யங்களாக்கப்பட்டன—சுதேச சமஸ்தானங்களையும் இணைத்து!

பின்னர், மொழிவழிக் கோரிக்கை வலுப்பெற்று வருவதைத் தடுத்து நிறுத்துவதற்காக மாநிலப் புது அமைப்புக் குழுவை நியமித்தனர், இந்தியப் பேரரசினர்!

அவர்கள் பல இலட்சம் ரூபாயை விழுங்கிவிட்டு, தெளிவான அநீதிகளை நீதியென்று கூறி சில தீர்ப்புகளை வழங்கி, இந்தியாவை 16 மாநிலங்களாக்க வேண்டும் என்றனர்; இந்தியப் பேரரசினர், அவற்றில் சில மாறுதல்களுடன் ஏற்கப்போவ

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு: வரவேற்புச் செயற்குழுக் கூட்டம்

★

29—1—56 ஞாயிறு மாலை 5 மணிக்கு

சிதம்பரம் மாலை கட்டித் தெரு, சாதுகூடக் கட்டிடத்தில்

நடைபெறும்

பொருள்: மாநில மாநாடு ஆக்க வேலைகள்

✶

செயற்குழு உறுப்பினர்கள் தவறாது வருகை தர வேண்டுகிறேன்

—எம். எஸ். மணி, செயலாளர்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

உலக அரங்கில் கேலியும்-கிண்டலும்!

அமெரிக்காவின் நம்பிக்கை சிதறுகிறது!

ஆப்கனுக்கு ரஷ்யா வழங்கும் கடன்

புதுடில்லி, ஜன 24—

ஆப்கானிஸ்தானத்திற்கு ரஷ்யா 10 கோடி டாலர் கடன் கொடுப்பதற்கான சோவியத் — ஆப்கன் ஒப்பந்தத்தில் ஆப்கன் மன்னர் கையொப்பமிட்டுவிட்டதாக காபூல் செய்தி ஒன்று கூறுகிறது.

ரஷ்யக் குடியரசுத் தலைவர் பதவி விலகல்

லண்டன், ஜன. 24—

ரஷ்ய சோவியத் பெடரல் குடியரசின் பிரதம மந்திரி அலெக்சாண்டர் என். புசானேவ் இராஜிநாமாச் செய்துவிட்டாரென்றும் அவருடைய இடத்திற்கு மாஸ்கோ மேயராக இருந்த மைக்கேல் யாஸ்ஜேவ் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்றும் தெரிய வருகிறது.

சோவியத் யூனியனிலேயே ரஷ்ய சோவியத் குடியரசுதான் மிகப் பெரும் மாநிலமாகும்.

இங்கிலாந்து ஆராய்கிறது!

(சமத அரசியல் நிருபர்)

மாகாண சீரமைப்புக் குழுவின் சிபாரிசுகள்மீது இந்தியப் பேரரசு, எதேச்சாதிகாரப் போக்கில் முடிவு கூறியது.

மராட்டியர்கள் கொதித்தெழுந்தனர்; பம்பாய் நகரில் புரட்சிப் புயல் வீசத் தொடங்கியது. ஒரு கிழமைவரை நரசவேலைகள் நர்த்தனமாடின. சட்டப்படி அமைந்த காங்கிரஸ் அரசாங்கம் ஆட்டம் கொடுத்துவிட்டது.

நேருவின் படங்கள் தீக்கிரையாக்கப்பட்டன; 'கொடும்பாவிகள்' கொளுத்தப்பட்டன.

குஜராத்தியர்களுக்கு எதிராக மராட்டியர் தாக்குதல் நடத்தினர். பீதியடைந்த குஜராத்தியர், தங்கள் தங்கள் பெண்களுடனும், குழந்தைகளுடனும் பம்பாய் நகரைவிட்டுக் குஜராத்துக்குத் திரும்புவதில் தீவிரம் காட்டினர்.

'இந்தியா ஒன்று' எனக் கூறப்பட்டுவந்த வாதம் பொய்யென பம்பாய்க் கலவரம் மெய்ப்பித்துக் காட்டிவிட்டது. இந்தியாவில் நேருவுக்கு அபாரமான செல்வாக்கு இருப்பதாகக் கொள்ளப்பட்டிருந்த நம்பிக்கையையும், பம்பாய்க் குழப்பம் நாசம் செய்துவிட்டது.

உலகத்தலைநகர்களில், பம்பாய்க் கலவரத்தை முன்னிறுத்தி, இந்தியாவில் நேருவுக்குள்ள செல்வாக்கு மதிப்பிடப்படுகின்றது. 'இவ்வளவுதானா செல்வாக்கு?' என்ற ஐயம், உலக அரசியல் தலைவர்களிடை அரும்பத் தொடங்கி இருக்கிறது.

அமெரிக்கர் கண்களில், இந்தியாவின் கீர்த்திக்குப் பங்கம் ஏற்பட்டு இருக்கிறது. ஆசியாவில் அரசியல் துறையில் பலம் பெற்று விளங்கும் ஒரு நாடு இந்தியா என அமெரிக்கா எண்ணிக்கொண்டிருந்த எண்ணத்தில், நிகழ்ந்துள்ள குழப்பங்கள், பரவலாக பெரும் சந்தேகத்தைக் கொடுத்திருக்கின்றன. இந்த நிலைமை ஒழுங்காகச் சீர்செய்யப்படாவிட்டால், இது, இந்திய ஒற்றுமையைச் சிதறடித்துவிடுவதில் போய் முடியும் என வேறு சிலர் கருதவும் செய்கின்றனர்.

இங்கு நடைபெற்றக் குழப்பங்களைக் குறித்து ஒழுங்காகவும், நல்லெண்ணத்துடனும்

(4-ம் பக்கம் பார்க்க)

சிங்கள மொழி வெறிக்குக் கோத்தலாவலை பலி

தமிழின் சமநிலையைப் பறிக்க முடிவு

கொழும்பு, ஜன. 24—

சிங்கள மொழி வெறிக்குப் பிரதமர் கொத்தலாவலையும் இலக்காகி விட்டதாகத் தெரியவருகிறது.

இதுநாள்வரையில், 'இரண்டுங்கெட்டான்' நிலையிலிருப்பதாகத் தோற்றமளித்துவந்த கொத்தலாவலை, தமிழ் மொழிக்குரிய நியாயமான உரிமையைப் பறித்துவிடத் தீர்மானித்துவிட்டதாகத் தெரிகிறது.

கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர், தனது ஐக்கிய தேசியக் கட்சி, சிங்களத்தை மட்டுமே இலங்கையின் ஆட்சி மொழியாக ஆக்கிவிடும் என்று உறுதியளித்திருக்கிறாராம்.

இந்த முடிவு, வரப்போகும் கட்சி மாநாட்டில் (பிப்ரவரி 17-ந் தேதி) மேற்கொள்ளப்படும் என்றும், அந்த முடிவுக்கு ஒப்ப அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்காக நாட்டு மக்களிடம் செல்லப் போவதாயும் கூறினாராம்.

சிங்கள மொழியை மட்டும் அரசாங்க மொழியாக்குவதற்கு மக்கள்சபையில் 65 பேர்களின் ஆதரவு வேண்டும்.

எல்லாத் தொழில்களுக்கும் விரிவாக்கப்படும்

தொழிலாளர் நல நிதித் திட்டத்தின் பலன்கள் எல்லாத் தொழில்களுக்கும், வர்த்தக நிறுவனங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தும் ஒரு திட்டம் சீக்கிரம் அமுலுக்கு வரும் என்று தொழிலாளர் நல இலாகா மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

29—1—1956 ஞாயிறன்று காலை 10 மணிக்கு

சிதம்பரம் மாலைகட்டித் தெரு, சாதுகூடக் கட்டிடத்தில் நடைபெறும்

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் முக்கியப் பொருள்கள்:

(1) மாநில மாநாடு
(2) கழகச் சட்டதிட்டம் திருத்தம் செய்தல்
(3) கொள்கை விளக்க நூல் வெளியிடுதல்
(4) மாநிலப் புது அமைப்புப் பற்றி முடிவெடுத்தல்

குறிப்பு: பார்வையாளர்களாக எவரும் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்

—தி. மு. க. தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 25—1—'56 புதன்

இரண்டு திங்கள்தான்!

மாகாண சீரமைப்புக் குழுவின் முடிவுமீது, சென்னை மேல் சபையில் நவம்பர் இருபத்திரண்டாம் தேதி விவாதம் நடைபெற்று இருக்கிறது.

அரசாங்கச் சார்பில் மேல் சபையில், அரசாங்கக் கருத்தை வலியுறுத்திப் பேசியவர் அமைச்சர் பக்தவத்சலமேயாவார்.

அப்பொழுது அவர் கூறிய நியாயத்தையே இப்பொழுது அவரே மறுத்தும் நையாண்டி செய்வதுபோன்றும் பேசுகிறார்.

இரண்டுக்கும் இடையில் இருப்பது இரண்டே திங்கள் தான். இரண்டு திங்களுக்குள்ளாக இவ்வளவு முரண்பட்டுப் பேசுகிறவர், தனது பொது வாழ்வில் போதிய பயிற்சி இல்லாமலா பேச முடியும்?

இரண்டு திங்களுக்கு முன்பாக நியாயமெனப்பட்ட ஒரு விஷயத்தில்—நியாயமெனப் புள்ளிவிவரம் காட்டி வாதாடப்பட்ட ஒரு விஷயத்தில், இரண்டு திங்களுக்குள்ளாக அதே விஷயத்தில் நேர்மாறாகப் பேச ஒருவருக்குத் துணிவு ஏற்படுகிறது என்றால், அது சிந்தித்து உணரத்தக்கதாகும். அத்தகு மனப்பாங்குடையவர்கள் அரசியல் வாழ்வில் இடம் பெற்று இருப்பதால், அரசியல் துறை எந்த அளவில் அறநெறியிலிருந்து விலகிப்போயிருக்கிறது என்பதும் கருதத்தக்கதாகும். எனவே அரசியல் துறை புனிதம் பெற்று அறநெறி வழி இயங்க வேண்டுமானால், அமைச்சர் போன்றவர்கள் அங்கிருந்து விரட்டப்படுவதின்மூலம்தான் அது சாத்தியமாகும்.

"தங்களுடைய வழக்கு பொய்யானதாக இருந்தபோதிலும், சிலவற்றை வற்புறுத்தினால் தாங்கள் வெற்றி பெறுவோம் என எண்ணுகிற மற்றவர்களைப்போல் அல்லாமல், சென்னையில் நாங்கள் புள்ளிவிவரத்துடன் பேசுகிறோம். புள்ளிவிவர அடிப்படையில் சில பகுதிகளைக் கோருவதற்கு உரிமை இல்லை என நாங்கள் உணர்ந்தால், அவைகள் நமது இராஜ்யத்துடன் இணைக்கப்பட வேண்டுமென நாங்கள் வற்புறுத்துவதில்லை."

இந்த முன்னுரையுடன் சென்னை அரசாங்கத்தின் கோரிக்கையை அமைச்சர் பக்தவத்சலம் இரண்டு திங்களுக்குமுன் சென்னை மேல் சட்டசபையில் வலியுறுத்தினர். அதே அமைச்சர்தான், இந்தியப் பேரரசின் அநீதியான முடிவைக் கண்டு தமிழர்கள் அடிபணிந்து வரவேற்க வேண்டும என இப்பொழுது வம்பளக்கிறார்.

நீலமலையைச் சேர்ந்துள்ள கூடலூர் சென்னையுடன் இருக்கவேண்டுமென் இந்தியப் பேரரசு முடிவு கட்டி இருப்பது கண்டு பரவசப்பட்டு அமைச்சர் பக்தவத்சலம் இப்பொழுது கூறி இருப்பதும், அதே கூடலூர் பற்றி இரண்டு திங்களுக்கு முன் சென்னை மேல்சபையில் குறிப்பிட்டிருப்பதும் ஒன்றுக்கு ஒன்று முரண்படுவனவாக உள்ளன.

அப்பொழுது மேல் சபையில் :—

'கூடலூர், மொழியிலும் போக்கிலும் மலையாளமில்லாததாகும்; நீலகிரியுடன் இணைந்துள்ள பகுதியுமாகும்.'

இப்பொழுது :—

'கூடலூரில் மெஜாரிட்டி மலையாளிகள். எனினும் சென்னை ராஜ்யத்திற்கு இதர காரணங்களுக்காகக் கூடலூர் வேண்டுமென்று சென்னை சர்க்கார் வலியுறுத்தினர். இதனைக் காங்கிரஸ் உயர்தரக் கமிட்டி ஏற்றுக்கொண்டது."

ஏன் இந்த முரண்பாடு அமைச்சர் பக்தவத்சலத்தின் பேச்சில் காணப்படுகிறது?

செங்கோட்டையைக் குறித்து இதே அமைச்சர் அப்பொழுது என்ன கூறினர், இப்பொழுது என்ன கூறி இருக்கிறார் என்பதைப் பார்ப்போம்.

இப்பொழுது :—

"செங்கோட்டைத் தாலுகாவில் மேற்கு மலைத் தொடர்ச்சியின் குன்றுகள் இரு இராஜ்யங்களுக்கும் இயற்கை எல்லையாக இருக்கிறது. இந்த மலைத் தொடர்ச்சியில் எழும் நதிகள் கிழக்கு-மேற்கு இரு திக்கிலும் ஓடுகின்றன. மலைத்தொடர்ச்சியின் மேற்குப் பகுதியில் மிகக் குறைந்த ஜனத் தொகையுடைய அடர்த்தியான வனப் பிரதேசம் உண்டு. இந்த வனப் பிரதேசத்தைச் சென்னைக்குக் கொடுத்திருந்தால் இந்த இராஜ்யம் இன்னும் வளமுடையதாக இருக்கும். ஜனத்தொகை அடிப்படையில் இந்தப் பிரதேசத்தைக் கோர முடியாது."

இதே செங்கோட்டை பற்றி மேல்சபையில் இதே அமைச்சர் கூறியிருப்பது :—

"செங்கோட்டையின் காட்டுப் பகுதி தனது ராஜ்யத்தில் இணைக்கப்பட வேண்டுமென திரு — கொச்சி அரசாங்கம் சிறப்பாகக் கோரியுள்ளது. அங்குள்ள மக்கள் தொகையில் 93 சத விகிதத்தினர் தமிழர்களாக இருப்பதால், அது சென்னை ராஜ்யத்துடன் இணைக்கப்பட வேண்டுமென்று மாகாண சீரமைப்புக் குழு நியாயமாகச் சிபாரிசு செய்திருக்கிறது."

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். அதைப்போன்றே, அமைச்சர் பக்தவத்சலத்தின் முரண்பட்டப் போக்கிற்கு, மேல் எடுத்துக் காட்டியுள்ள இரண்டு எடுத்துக்காட்டுகளே போதுமென்று நினைக்கிறோம்.

தேவிகுளம், பீர்மேடு குறித்து, அமைச்சர் அன்று மேல் சபையில் பேசியிருப்பது கருதத்தக்கது.

அவர் அன்று கூறியது:—

"தேவிகுளம் — பீர்மேடு தாலுகாக்களை சென்னை கோருவது, நிலப் பரப்பை விரிவாக்கிக் கொள்ள வேண்டுமென்ற கருத்தால் அல்ல. தங்களுடைய தாய் நாட்டுடன் இணைந்து கொள்ள வேண்டுமென்று இயல்பாகவே அங்குள்ள தமிழர்கள் பேரவா கொண்டுள்ளனர். அது நியாயமான கோரிக்கையாகும். சென்னை இராஜ்யத்துடன் அந்தத் தாலுகாக்கள் இணைக்கப்பட வேண்டும். கடந்த பொதுத் தேர்தல்களில் அங்குள்ள வாக்காளர்கள் இப்பிரச்சினையில் தெளிவான தீர்ப்பைக் கூறி இருக்கிறார்கள்."

இவ்வாறு அன்று மேல் சபையில் கூறிய அமைச்சர் பக்தவத்சலம்தான், இன்று வேறுமாதிரியாகப் பேசுகிறார்; இந்தியப் பேரரசின் அநீதியான முடிவை எதிர்ப்பவர்களை ஏசவும் செய்கிறார்.

இந்தியப் பேரரசின் அநியாயத் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதுதான் முறையானது என்றும், கட்டாயப் பஞ்சாயத்தின் முடிவுக்குக் கட்டுப்பட்டு நடப்பதுதான்நியாயமானது—தமிழர்களின் கடமை என்றும் அமைச்சர் பக்தவத்சலம் போதனை புரிகிறார்.

காசர்கோடு தாலுகாவின் வட பகுதி உருவாக்கப்பட இருக்கும் கர்நாடகத்துடன் சேர்க்கப்பட வேண்டுமென சென்னை சட்டசபைகள் கருத்தறிவித்தன. அதன்படி நடவாது, இந்தியப் பேரரசு அத்தாலுகா முழுவதையும் கேரளத்துடன் இணைத்துத் தீர்ப்பளித்துவிட்டது.

காங்கிரஸ் பெரிய தலைவர்கள் தீர்ப்பளித்துவிட்டார்களே என்பதற்காக, அமைச்சர் பக்தவத்சலம் தமிழர்களுக்குக் கூறுவதுபோல் செய்யாது, கூட்டு அமைச்சரான ஷெட்டி, தீர்ப்பளித்தவர்களைக் கண்டிக்கிறார்; கிளர்ச்சி வேண்டுமெனவும் கோருகிறார்.

கனம் ஷெட்டியும் அமைச்சர்தான்; தமிழர்களுக்கு அடிமை அமுதூட்டும் கனம் பக்தவத்சலமும் அமைச்சர்தான்!

கன்னட மக்களின் வழிநிற்கக் கனம் ஷெட்டி விரும்புகிறார்.

ஆனால், கனம் பக்தவத்சலமோ தமிழர்களைக் காட்டிக் கொடுப்பதில் தீவிரம் காட்டுகிறார்.

இரண்டு திங்களுக்கு முன்னால் தனக்கே நியாயமெனப்பட்டது; இந்தியப் பேரரசின் முடிவிற்குப் பிறகு அநியாயமெனப்படுகிறது.

கனம் பக்தவத்சலத்திற்கு அமைச்சர் பதவிதான் இந்த முரண்பாட்டிற்குக் காரணம் என்று உறுதியாகக்கொள்வதைத் தவிர வேறு எதைக் கொள்வது?

வருகையின் பலன்!

மேற்கு ஜெர்மனியின் உதவிப் பிரதமரான டாக்டர் பிரான்ஸ் ப்ளூசெர் தனது இந்திய வருகையின பலன்கள் இரண்டு என்று குறிப்பிட்டிருக்கிறாராம்.

ஒன்று, மேற்கு-கிழக்கு ஜெர்மனிகள் ஐக்கியமாவதில் உள்ள சிக்கல்களை இந்தியா மேலும் தெளிவாக உணர்ந்துகொள்ள உதவியது; மற்றொன்று, தேசிய நலன்கள், மற்றும் பூகோள ரீதியான காரணங்கள் இவற்றின் அடிப்படையில் இந்தியா மேற்கொண்டிருக்கும் வெளிநாட்டுக் கொள்கை, ஒரு சுதந்திரமான நடுநிலைக் கொள்கை என்பதை மேற்கு ஜெர்மனி தெரிந்துகொள்ள முடிந்தது என்று அவர் விளக்கம் தந்தாராம்.

'தீர்வு காணும் பொறுப்பு மக்களிடமே உள்ளது'

பொங்கல்விழா பொதுக்கூட்டத்தில் துணைப்பொதுச்செயலாளர் விளக்கம்

"தமிழரின் நல்வாழ்வுக்காக நம் தலைவர்கள் அரும்பாடு பட்டுள்ளனர். செக்கிழுத்த வ. உ. சிதம்பரனர், திராவிடத் தீரன் திருப்பூர் குமரன், தில்லையாடி வள்ளியம்மை, தமிழ்ப் பெரியார் திரு வி கல்யாணசுந்தரனர், பெரியார் இராமசாமி ஆகியோரும், மற்றுமுள்ள தொண்டர்கள் அத்தனை பேரும் அடக்குமுறைக்கு ஆளாகித் தமிழுக்காகப் பாடுபட்டவர்களே! நாம்—தொழிலாளர்களானலும், தொண்டர்களானலும், அரசாங்க உத்தியோகஸ்தர்களானலும், யாரானலும் நாம் அத்தனை பேரும் உறுதிகொள்வோம்—தமிழர்களுக்குத் துரோகமிழைக்கும் வஞ்சகர்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்கு நாம் தரும் பாடம் வடநாட்டுக் கோட்டைமீது இருப்போருக்குத் தருவதாக இருக்க வேண்டும். இதை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்,"

—என்று, 21—1—56 மாலை 6 மணிக்கு, சென்னை-பெத்துநாய்க்கன் பேட்டை திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகச் சார்பில் நடைபெற்றக் கூட்டத்தில், தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்குத் தோழர் மா நடராசன் தலைமை வகித்தார் தோழர்கள் போளூர்-சுப்பிரமணியம், காஞ்சி - கலயாணசுந்தரம, என். வி. நடராசன் ஆகியோர் பேசினர்.

நேருவின் அக்கிரமத் தீர்ப்பை எதிர்த்துத் தீர்மானமும் நிறைவேறியது.

மேலும், துணைப பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசியதாவது :—

"நமக்குச் சேரவேண்டிய தமிழகப் பகுதிகளைக் குறித்து எலலாக் கட்சியினரும் தங்களின எண்ணத்தைத் தைரியமாகவும், திட்ட வட்டமாகவும் தெரிவித்திருக்கின்றனர். ஆக, இத்தனை அரசியல் கட்சிகளும தேவிகுளம, பீர்மேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் ஆகிய பகுதிகள தமிழகத்துடன் சேரவேண்டும் என்பதைத் தீர்மானங்கள் மூலம் இந்தியப பேரரசிற்குத் தெரிவித்தும, அத்தனை கட்சிகளின கோரிக்கைகளையும் மதிக்காமல் வெளிவந்த நேருவின் எதேச்சாதிகாரத் தீர்ப்பு நமக்கு வேதனையைத் தருகின்றது.

"பம்பாய் தங்களுக்கு வேண்டும் என்றவர்கள், இந்த அநீதியான தீர்ப்பை எதிர்க்கின்றார்கள் என்பதனால் அவர்களைக் கண்ட இடத்திலெல்லாம சுட்டுத் தள்ளும்படி உத்தரவிட்டிருக்கிறது, நேரு சர்க்கார்; சுட்டுத் தள்ளினார் போலீசார்.

"'மக்களைச் சுட்டுத் தள்ளுகின்றானே வெள்ளையன்—ஏகாதிபத்திய வெறியன்; பஞ்சாப் படுகொலையைப் பாரீர்! வெள்ளைக்காரனின் அட்டூழியத்தைப் பாரீர்'—என்று, 1947-ம ஆண்டுக்குமுன் எந்தத் தேசியத் தலைவர்கள் கூறிவந்தார்களோ, அதே தேசியத் தலைவர்கள்தான் இன்று தங்களாட்சியிலும் துப்பாக்கி ஆட்சி நடத்துகிறார்கள். இவர்கள் சுட்டுத்தள்ளுவது யாரை? வெள்ளையனையா, அமெரிக்கனையா, அல்லது ஏழையை ஏய்த்துப் பிழைக்கும் முதலாளிகளையா? அல்ல, எந்தக் காங்கிரஸ் தோழர்கள் கண்ணியமுடன் பாடுபட்டுக் காங்கிரசை வளர்த்தார்களோ, அந்தக் காங்கிரஸ் தோழர்களைத்தான் சுட்டுத் தள்ளியிருக்கின்றனர்.

"மொழிவழி மாநிலம் பிரிக்கப்பட வேண்டும என்கிற உணர்ச்சி இன்றைக்கு அசைக்க முடியாத அளவுக்கு இருக்கிறது. நம்முடைய தமிழ்ப் பகுதிகள் நமக்குச் சேர வேண்டும் என்பதைக் 'தான'மாகக் கேட்கவில்லை. ஆதாரங்களைக் காட்டி-புள்ளிவிவரங்களைக் காட்டி—அங்கு வாழும் மக்களின் நிலைகளைக் காட்டிக் கேட்டோம்; அதனை ஏற்கவில்லை டில்லி சர்க்கார். இன்று பம்பாயைக் கவனித்தால், அங்கு கிளர்ச்சி செய்பவர்கள் எல்லாம நேருவின் நண்பர்கள்; அனைத்திந்தியக் காங்கிரசின் அங்கம் வகித்தவர்கள்; மத்திய சர்க்காரில் மந்திரியாக இருந்த என். வி. காட்கில் அவர்கள்; இன்னும் ஏராளமான காங்கிரஸ் தொண்டர்கள்; அவர்கள்தான் இன்று, 'எங்களுக்குப் பம்பாயைத் தருகின்றீயா?—நேருவின் சிலையை உடைக்கட்டுமா?' என்று கேட்கிறார்கள்.

"நண்பர் கண்ணதாசன் பம்பாய் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு வந்து சேர்ந்திருக்கிறார் அவர் சொல்லுகிறார், தான் கண்ட காட்சிகளை—'நாமெல்லாம் வடநாட்டவனை விரட்டவேண்டும் என்று சொல்கிறோம்; ஆனால், மராட்டியக் காங்கிரஸ்காரர்களோ எங்கெங்கு நேரு சிலை இருக்கிறதோ அதையெல்லாம் உடைத்துத் தூள் தூளாக்கி விட்டிருக்கிறார்கள்; அவர்கள் செய்கிற பயங்கரப் போராட்டத்தை நாம் கூட செய்யமாட்டோம்' என்று! இதையெல்லாம் செய்தவர்கள் யார்? காங்கிரஸ்காரர்கள்தான். அவர்களுக்குள்ள மொழிப் பற்றைப் பாருங்கள்.

"இங்குள்ள மந்திரிகள் கோழை மனம் படைத்தவர்கள். நம் மந்திரிகளுக்குத் தேர்தல்தான் முக்கியப் பிரச்சினையாக—உயிர்ப் பிரச்சினையாக இருக்கிறதே தவிர, தமிழரின் மானத்தைப் பற்றி — மனிதாபிமானத்தைப் பற்றி அவர்களுக்குச் சிறிதளவும் அக்கரை இல்லை.

"நாம் நேருவைப் பற்றிப் பேசினால், நேருவிற்குப் பரிந்து பேசுகிற காமராசர், நேருவிடம் சொல்லியிருக்க வேண்டாமா — தமிழ் நாட்டின் தற்போதைய நிலையைப் பற்றி? 'நேரு பண்டிதரே நான் உம்மைப் பற்றிப் புகழ்ந்து பேசினேன்;—தமிழர்களுக்குத் துரோகமிழைக்கமாட்டார் நேரு—என்று சொன்னேன்; உம்மை முழு மனதோடு நம்பினேன்; நீங்களோ எங்களுக்கு அநீதி இழைத்துவிட்டீர்களே; இந்த மந்திரி சபையிலிருந்து நாங்கள் ராஜினாமா செய்யட்டுமா'?—என்று அவர் கேட்டிருந்தால், காமராசரும், அங்குள்ள எல்லா மந்திரிகளும் அலறி அடித்துக் கொண்டு ஓடிவந்திருக்க மாட்டார்களா? காமராசர் போயுள்ளார் டெல்லிக்கு! வெற்றியோடு வந்தால் வரட்டும்; இல்லையெனில், 'இராஜினாமாச் செய்க' என்ற அளவுக்கு மக்கள் கொதித்தெழ வேண்டும்—விழிப்படைய வேண்டும்.

"இந்தப் பிரச்சினையின் தீர்ப்பு, பொதுமக்களாகிய உங்கள் கையில் தான் இருக்கிறது. இதைப் பற்றி உங்கள் கருத்தை நீங்கள்தான் எங்களுக்குச் சொல்லவேண்டும். நாமெல்லாம் ஒன்றுபட்டு இதற்கு ஒரு முடிவு காணவேண்டும். யார் யார் இந்தக் கருத்திற்கு ஒன்று சேருகின்றார்களோ அவர்களுடன் திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து தன முழுஆதரவையும் தர இருக்கிறது. நம் முழக்கங்களை டில்லிக்குத் தெரிவிப்போம். 'தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் பகுதிகள் தமிழகத்துடன் சேரவேண்டும்' என்று சொல்லுவோம்; 'மந்திரிகளே இராஜினாமாச் செய்யுங்கள்' என்று எங்கும் சொல்லுவோம்; இந்தப் பிரச்

(8-ம் பக்கம் பார்க்க)

'ஒரு வேலாயுதர் கொலை செய்யப்பட்டார்'

'ஆயிரம் வேலாயுதங்கள் தோன்றிவிட்டனர்'

உடையார்பாளையத்தில் கழக முன்னணி வீரர்கள்

"உடையார்பாளையம் வேலாயுதம் அவர்கள் பெயரால் அமைக்கப்பட்டுள்ள இந்தப் படிப்பகத்தின் விழாவில் பங்கு கொள்வதில் மிக்க பெருமையடைகிறேன். ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு அந்த உத்தமனை ஒழித்துக்கட்டுவதின்மூலம்—அவருடைய உயிரைப் பிரிப்பதின்மூலம் அவர் தாங்கிநின்ற புனிதமான கொள்கைகளைப் புதைகுழிக்கு அனுப்பிவிடலாம் என்று கனவு கண்டனர், கருத்துக் குருடர்கள்; ஆனால், நடந்ததென்ன? வேலாயுதத்தின் பிணம்தான் கீழே விழுந்தது; அந்தப் பிணம் விழுவதற்கு முன்னால், ஆயிரம் வேலாயுதங்கள் தோன்றிவிட்டார்கள்; பல்லாயிரம் வேலாயுதங்களாகப் பெருகுகிறார்கள். அந்தக் காட்சியின் ஒரு பகுதிதான் இந்தப் படிப்பகம்,"

—என்று, 21—1—56 மாலை, உடையார்பாளையம் வேலாயுதம் நினைவுப் படிப்பகத் துவக்க விழாவில் பேசும்போது தோழர் கே. ஏ. மதியழகன் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் சொன்னார்:—

"கொலை செய்வதின் மூலம் கொள்கையை ஒழித்துவிடலாம் என்பது எவ்வளவு தவறுடையது என்பதைத் தமது அரும்பெரும் தியாகத்தின்மூலம் வேலாயுதம் நிரூபித்துவிட்டார். மரணத்திற்குப் பயந்து எந்த இலட்சியமும் மரணமடைந்துவிடவில்லை. மற்ற மக்கள் கிடக்கட்டும்; வேலாயுதம், எந்த இலட்சியங்கள் இந்த நாட்டில் நடமாட வேண்டுமென்று கருதித் தனது ஆருயிரை அர்ப்பணித்தாரோ, அந்த இலட்சியங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டிருக்கும் இந்தப் படிப்பக விழாவிற்கு அவர் சொந்த மருமகன் தலைமை தாங்குகிறார்; என்ன பொருள் இதற்கு?"

வேலாயுதம் நினைவுப் படிப்பகத் துவக்க விழா, உடையார்பாளையத்தில், வேலாயுதம் அவர்களின் மருமகனும், பச்சையப்பன் கல்லூரி மாணவருமான தோழர் க. ந. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் தோழர் க. அன்பழகன் அவர்கள் படிப்பகத்தைத் திறந்து வைத்து அரியதோர் சொற்பொழிவாற்றினார்.

தோழர் கே. ஏ. மதியழகன் சிறப்புரையாற்றினார்.

விழா முடிவிற்குப் பிறகு படிப்பகத்தில் சிறுவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டன.

(ந. கி.)

மோட்டார் வண்டிகளுக்கு பதிவுக் கட்டணம்

கடந்த ஓராண்டில், மோட்டார் கார்கள், வண்டிகளுக்கு லைசென்ஸ் கட்டணம், மற்றும் பதிவுக் கட்டணம் முதலியவைகளினால் இலங்கை சர்க்காருக்கு ரூ 30-இலட்சம் வருமானம் கிடைத்ததாகத் தெரியவருகிறது.

இலங்கையில், 75,000 மோட்டார் வாகனங்கள் இருப்பதாயும், 'மோட்டார் கார்'கள் மட்டும் 5,23,000 என்றும் கூறப்படுகிறது.

சுமார் 4,25,000 மக்கள்தொகையுடைய கொழும்பு நகரில் மட்டும் 35,000 மோட்டார் வண்டிகள் 'லைசென்ஸ்' வழங்கப்படுகின்றனவாம்.

தீர்வு காணும்—

(2-ம பக்கத் தொடர்ச்சி)

சினைக்குப் பேராதரவு தாருங்கள்; நல்லதோர் முடிவு காண்போம்."

தீர்மானங்கள்

"பம்பாய் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர்நீத்த வீரர்களுக்கு இக்கூட்டம் அனுதாபம் தெரிவிப்பதுடன், நேரு சர்க்காரின் அடக்குமுறையையும் வன்மையாகக் கண்டிக்கிறது;

'திரு-கொச்சி—ஆந்திர மாநிலங்களிலுள்ள தமிழ்ப் பகுதிகள் அனைத்தும் தமிழகத்துடன் சேர்க்கப்பட வேண்டும் என்று இக்கூட்டம் வற்புறுத்துவதுடன், மாநிலப் புது அமைப்புக் குழுவின் அறிக்கைமீது நேரு பண்டிதர் கூறிய தீர்ப்பை இக்கூட்டம் வன்மையாகக் கண்டித்து எதிர்க்கவும் செய்கிறது. இதற்கான முயற்சிகளில் எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட வேண்டும் என்று இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது"

என்று, கூட்ட இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மற்றும், சென்னை 8-வது வட்ட தி மு கழகத் தோழரும், திருவள்ளுவர் முத்தமிழ்க் கழக உறுப்பினருமான தோழர் மு நடராசன் மனைவியார் இயற்கையெய்தியமை குறித்து அனுதாபம் தெரிவித்தும் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

தமிழகமெங்கும் கொதிப்பு

சேலத்தில் இரயில் நிறுத்தம்

போலீசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

சேலம் அம்மாப்பேட்டை அருகே, விருத்தாசலம் செல்லும் பிரயாணிகள் இரயில் ஒன்றை, டெல்லித் தீர்ப்புக்கு எதிர்ப்புக் காட்டும் வகையில் 3,000 பேரடங்கிய மக்கள் கூட்டம் தடுத்து நிறுத்திவிட்டிருக்கிறது.

சுமார் 90 நிமிடங்கள் வரை இரயில் தாமதிக்க நேர்ந்தது.

கூட்டத்தினரைக் கலைக்கப் போலீசாரது தடியடிப் பிரயோகம் பயனில்லாதுபோகவே, கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

இதனை ஒட்டி, போலீசார் சுமார் 13 பேர்களைக் கைது செய்தனராம்.

சேலம் நகரில் இப்போது தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம்.

மதுரை:

மதுரை நகரில் மீண்டும் இன்று, தலைமைத் தபால் அலுவலகத்தின் முன் மறியலில் ஈடுபட்டதாகப் போலீசார், தமிழரசுக் கழகத்தைச் சார்ந்த 3 பேர்களைக் கைது செய்தனர் என்று தெரியவருகிறது.

திண்டுக்கல்—திருச்சி இரயில் பிரிவில், வட மதுரைக்கு அருகே சங்கிலியை இழுத்து இரயிலை நிறுத்தியதாக மூவர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மதுரை நகரில் ஏற்கனவே பாங்கி ஊழியர் வேலை நிறுத்தத்தை முன்னிட்டுக் கடந்த 21-ந் தேதி வரை விதிக்கப்பட்டிருந்த தடையுத்தரவு மேலும் ஒரு திங்களுக்கு இப்போது எழுந்துள்ள நிலைகளின் காரணமாக நீடிக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது.

திருச்சி:

திருச்சி கோட்டை தபால் அலுவலகத்தின் முன்பு மறியல் செய்த 10 தமிழரசுக் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

திருச்சி—ஈரோடு எக்ஸ்பிரஸ் இரயில் வண்டியை கோட்டை—பாலக்கரை இரயில் நிலையங்களுக்கிடையில் சங்கிலியைப் பிடித்து இழுத்து நிறுத்தியதாக இரண்டு தோழர்கள் கைதாகி உள்ளனர் என்றும், இதே இரயிலை வேறொரு இடத்தில் நிறுத்திய இரு தொண்டர்களையும் போலீசார் கைது செய்திருக்கின்றனர் என்றும் தெரிய வருகிறது.

ஸ்ரீரங்கம்:

இங்கு நகரம் முழுவதும் கடைகளை மூடும்படி தமிழரசுக் கழகத்தவர் கேட்டுக்கொண்டிருப்பதாயும்; கடையடைப்பு நடைபெற்று வருவதாயும் கூறப்படுகிறது.

பொள்ளாச்சி:

பொள்ளாச்சி நகரத்தில் கடைகள், வர்த்தக நிறுவனங்கள் எல்லாம் மூடப்பட்டதுடன், மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்லாமல் வீதிகளின் வழியாக ஊர்வலம் வந்தனர்.

விழுப்புரம்:

தேவிகுளம், பீர்மேடு விவகாரத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியைக் கண்டித்து, மாணவர்கள் மாபெரும் ஊர்வலம் ஒன்று நடத்தியிருக்கின்றனர்.

தர்மபுரி:

தர்மபுரி நகரில் பூரணமாகக் கடைகள், பள்ளிக்கூடங்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்கின்றன. பாப்பாரப்பட்டியிலும் கடையடைக்கப்பட்டிருக்கிறது.

பாளையங்கோட்டை:

பாளையங்கோட்டை கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் ஆயிரம் பேருக்குமேல் கூடி கல்லூரி செல்லாமல், நேருவின் தீர்ப்புக்கு எதிராகக் கறுப்புக்கொடி பிடித்துக்கொண்டு ஊர்வலம் சென்றிருக்கின்றனர்.

பம்பாயில் 71 பேர் கொல்லப்பட்டனர் 2,000 பேர் கைதாயினர்!

நகரம் அமைதி பெறுவதாக தகவல்

பம்பாய், ஜன. 23—

கடந்த கிழமை முழுவதும் கொந்தளித்துக் கொண்டிருந்த பம்பாய் நகரில் இன்று அமைதி நிலவ ஆரம்பித்திருப்பதாகத் தகவல் தரப்படுகிறது.

நகரின் எல்லாப் பகுதிகளிலும் மக்கள் இன்று வழக்கம்போல தங்கள் அலுவலகளைக் கவனிக்கமுற்பட்டனர் என்றும், கடைகள், தொழிற்சாலைகள், ஆலைகள் முதலியன எப்போதும்போல வேலை துவங்கின என்றும், பஸ், டிராம், இரயில் போக்கு-வரத்துத் தங்கு தடையின்றி நடைமுறைக்கு மீண்டும் வந்தது என்றும, இன்று பிற்பகல்வரை எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

கடந்த கிழமை முழுவதும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது போலீசார் நூற்றுக் கணக்கான தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக 71 பேர் கொல்லப்பட்டனர் என்றும், 550 பேர் வரை காயமடைந்தனர் என்றும் கூறப்படுகிறது.

நகரில் சுமார் 2,000 பேர்வரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் இராணுவம், போலீஸ் 'பந்தோபஸ்து' ஏற்பாடுகள் இன்னும் 'வாபஸ்' பெறப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

பம்பாய் நகரில் குடியரசு தினத் தீபாலங்காரங்களை ரத்து செய்துவிடலாமென பம்பாய் சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களினால் கதிகலங்கிப் போன குஜராத்தியரில் சுமார் 5,000 பேர் வரை கப்பல் மூலம் வேற்று இடங்களுக்குப் பயணமாயினர் என்றும் தெரியவருகிறது.

சிதம்பரத்தில் சகல கட்சி கண்டனம்

பண்டித நேருவின் எதேச்சாதிகாரத் தீர்ப்பை எதிர்த்து கம்யூனிஸ்டுகள் நீங்கலாக இதர கட்சிகளின் ஆதரவில் ஒரு சகல கட்சிக் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றிருக்கிறது.

தோழர்கள் தில்லை-வில்லாளன், கோவிந்தராசன், தில்லை-கோவிந்தன், வீரமணி, மற்றும் பலரும் பேசியிருக்கின்றனர்.

காஞ்சிபுரத்தில் கண்டனம்

தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை கேரளத்துடன் சேர்ப்பதை எதிர்த்து, நேற்று காஞ்சிபுரத்தில் கண்டன ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடைபெற்றிருக்கிறது

தோழர் சே. குமாரதேவன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் எத்திராஜு (தி.மு.க.), பார்த்தசாரதி (கம்யூ), கண்ணன் (சோஷ.) மாணிக்கம் (தி.க.) முதலியோர் பேசினர்.

டில்லி முடிவை மாற்ற ஐ. சி. எஸ். அதிகாரி உறுதிமொழி!

ஆர்ப்பாட்டக்காரர்கள் அச்சுறுத்திப் பெற்றனர்

பூருலியா, ஜன. 23—

'பீகாரில் உள்ள மான்பூம் மாவட்டத்தின் ஒரு பகுதியை மேற்கு வங்க மாநிலத்திற்கு மாற்றுவது என்ற இந்திய சர்க்காரின் முடிவு திருத்தி அமைக்கப்படும்'—என்று ஒரு உறுதிமொழியை எழுத்துமூலமாகப் பெற்றனராம் சில ஆர்ப்பாட்டக்காரர்கள்—இந்திய சர்க்கார் உயர்தர அதிகாரி ஒருவரை வழிமடக்கி!

மத்திய சுகாதார இலாகா செயலாளரான வி. கே. பி. பிள்ளை ஒரு ஐ.சி.எஸ் அதிகாரி; அவர் பல காலம பீகாரில் பணியாற்றியிருக்கிறாராம்.

இங்கிருந்து 30 மைல் தொலைவில் உள்ள ஒரு ஊருக்கு அவர் வந்தபோது ஆர்ப்பாட்டக்காரர்கள், மேற்கண்டவாறு உறுதிமொழி ஒன்றை அவர் தராவிட்டால், அவரைப் படுகாயப்படுத்துவதாகப் பயமுறுத்திக் காரை விட்டு இறக்கி, அவ்வாறே எழுதி வாங்கிக்கொண்டனராம்!

'யார் ஆண்டால் என்ன என்றிருக்கின்றனர்'

'வடவரைப் பின்பற்றவே எண்ணுகின்றனர்'

'முன்னோரது வாழ்வு முறையை மறந்துவிட்டனர்'

தமிழர்கள் மீது பி. டி. இராசன் குற்றச்சாட்டு

"இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன—என்ற எண்ணம் தமிழரிடத்தில் வேரூன்றிவிட்டிருக்கிறது. தமிழனுக்கு உயிர் பெரிதல்ல; மானமதான் பெரிது.

"தமிழன் வடநாட்டுக்காரனைத்தான் பின்பற்ற எண்ணுகிறான்; நமது முன்னோர்கள் நடாத்திய வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுவதில்லை. 'சுயராஜ்யம்' வந்துவிட்டது என்று சொல்கிறார்கள்—என்ன பயன் என்று தெரியவில்லை!

"இன்று தமிழகத்தின் நிலை என்ன? எல்லாம் இழந்துவிட்டோம்; திருவேங்கடம் போய்விட்டது; திருத்தணியை விட்டுவிட்டோம்; பொருளாதார முன்னேற்றத்திற்கு எங்கு சென்றும் வழிவகை செய்கிறான் தமிழன். காடு மேடாய் கவனிப்பாரற்றுக்கிடந்த தேவிகுளம், பீர்மேடு பிரதேசங்களைக் கடும் உழைப்பால் வளநாடாக்கினான்; இன்று அவர்களை அங்கேயிருந்து துரத்துகிற நிலைமை வந்துவிட்டது."

—இவ்வாறு, சாத்தூர் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாவில் பி. டி. இராசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தமது பேச்சில் குறிப்பிட்டதாவது:—

"மனிதனை மனிதனுக்கும் சக்தி பெண்களிடம்தான் இருக்கிறது' வருங்காலப் பிள்ளைகள் யோக்கியர்களாக இருக்கவேண்டும்; அதைச் செய்யவேண்டிய பொறுப்பு பெண்களிடம்தான் இருக்கிறது.

"நாட்டிலே கல்லூரி பெருகி வருகிறது; ஆனால், ஒழுக்கமில்லை. கல்லூரியை மூடிவிட்டால்தேவலை. பெண்களே! பிள்ளைகளை அதிகமாகப் பெறுகிறீர்கள்! பெற்றால், அவர்களை ஒழுக்கமுள்ளவர்களாக வளர்க்க வேண்டும்; இல்லாவிட்...

(4-ம் பக்கம் பார்க்க)

நேருவின் செல்வாக்கு......

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

விளக்கமாக அமெரிக்கப் பத்திரிகைகள் வெளியிட்டிருந்த போதிலும், மெல்லிய இழையில்தான் இந்தியாவின் ஒற்றுமை தொங்கிக்கொண்டு இருக்கிறது என்றும், இங்குள்ள மக்கள் இடம், மொழி, ஜாதி, மதம் ஆகிய பற்றுகளுக்கிடையே பிளவுபட்டே கிடக்கின்றனர் என்னும் எண்ணத்தைத் தருவதாகவே அத்தகவல்கள் இருக்கின்றன.

இந்தச் சம்பவங்களுக்குப் பிறகு, இந்தியர்கள் தங்களை ஒரு தேசிய இனம் எனக் கூறிக்கொள்ள முடியுமா? உண்மையில் ஒரு நாட்டில் வசிக்கும் பல தேசிய இனங்களாக அவர்கள் இருக்கவில்லையா? என்ற கேள்வியை 'இந்து' நிருபரிடம் ஐரோப்பிய நிருபர் ஒருவர் ஆச்சரியத்துடன் வினவியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையிலும் பலர், இத்தகு பலாத்காரக் குழப்பங்களால் வெளிப்படும் ஒற்றுமையின்மை, இந்தியாவின் செல்வாக்கைப் பலவீனப்படுத்திவிடும் எனக் கருதுகின்றனர்.

இக்கலவரங்கள் கம்யூனிஸ்டு கட்சியினரின் கோர விளையாட்டு என்று அமெரிக்க அரசியல் வட்டாரம் உறுதியாக நம்புகிறது.

பிரதம மந்திரி என்ற முறையில் நேருவிற்கு இது ஒரு சோதனைக்காலம் என்றும் அக்கூட்டம் கருதுகிறது.'

இத்தகவலை 'இந்து' இதழின் விசேட நிருபர் தந்திருக்கிறார்.

இந்திய அரசாங்கத்தின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தையும், நேருவின் புகழையும் பாடிக்கொண்டுவரும் கம்யூனிஸ்டுகள், இத்தகையக் கலகங்களில் தலையிடமாட்டார்கள் என்ற எண்ணம் மாஸ்கோ அரசாங்க வட்டாரத்தில் நிலவக்கூடும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே.

"பெரும்பாலான மராட்டிய மக்களின் நியாயமான கோரிக்கைகளை சமாளிப்பதில் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கையில்தான், இந்திய அரசாங்கத்தின் அதிகாரம் அடங்கி இருக்கிறது,"

என்று, லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகை கருத்தறிவித்துள்ளது.

'பலாத்காரத்திற்குப் பணியோம்!'

'முடிவுகளை மாற்றி அமைக்க மாட்டோம்!'

காங்கிரசின் வீண் வீராப்பு

புதுடில்லி, ஜன. 23 —

"பலாத்காரத்திற்கோ பயங்கர முறைகளுக்கோ பணிந்து, மாநில சீரமைப்புப் பற்றி ஏற்கனவே செய்யப்பட்டுள்ள முடிவுகள் அல்லது இனிச் செய்யப்படும் முடிவுகள் இவற்றை மாற்றிக்கொள்ள மாட்டோம்,"

என்று, அகில இந்தியக் காங்கிரஸ் செயற் குழுவினர், தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கின்றனர்.

"நாட்டில் எவரேனும் பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டால், சர்க்கார், தம்மிடம் உள்ள அதிகாரங்கள், சக்திகள் அனைத்தையும் ஈடுபடுத்தி அவற்றை ஒடுக்க வேண்டும்" என்றும் தீர்மானம் கூறுகிறது.

"காங்கிரஸ் மந்திரிகள், சட்டசபை உறுப்பினர்கள் ஆகியோர் தங்கள் பதவிகளை 'இராஜினாமா'ச் செய்வது காங்கிரஸ் விதிகளுக்கு முரண்பட்டதாகும்; எனவே, அவர்கள் 'இராஜினாமா'ச் செய்வது அனுமதிக்கப்படமாட்டாது. ஏற்கனவே 'இராஜினாமா'ச் செய்திருப்பவர்கள் தங்கள் பதவி விலகலைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்," என்றும் தீர்மானம் கூறுகிறது.

அண்மையில், மாநிலப் புனரமைப்பு குறித்து இந்தியாவெங்கணும் எழுந்துள்ள நிலைகள், இந்தியாவின் ஒற்றுமைக்கே உலைவைப்பவை என்றும், அபாயம் மிகுந்த இந்த நிலையை வளரவிட அனுமதிக்கக்கூடாது எனவும் தீர்மானம் கூறுகிறது.

"சிறு விஷயங்களில் ஏற்படும் கருத்து வேற்றுமைக்காக, பெரு முயற்சிகளைப் பாழடித்துவிடக் கூடாது," என்றும் தீர்மானத்தின் மற்றோர் பகுதி கூறுகிறது.

பம்பாய் — கல்கத்தா இரயில் விபத்து

ஒருவர் கொல்லப்பட்டார்

பம்பாய், ஜன. 24—

பம்பாயிலிருந்து 340 மைல் தொலைவில், மல்காபூர், பிஸ்வா பாலம் இரயில் நிலையங்களுக்கிடையில் பம்பாய்—கல்கத்தா 'மெயில்' இரயில் வண்டி தடம் புரண்டதின் விளைவாக ஒருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் 13 பேர்கள் படுகாயமுற்றனர் என்று தெரிய வருகிறது.

எஞ்சினும், 10 பெட்டிகளும் பாதையை விட்டு விலகி உருண்டனவாம்.

கொல்லப்பட்டவர் ஆர். எம். எஸ். ஊழியர் எனத் தெரிகிறது.

இந்த விபத்திற்குக் காரணம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும், விபத்து நடந்த இடத்தருகே சில 'பிஷ் - பிளேட்டு'கள் அகற்றப்பட்டுக் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டதெனவும் கூறப்படுகிறது.

அடிபட்டவர்களுக்குப் பிரயாணம் செய்துகொண்டிருந்த மருத்துவர் ஒருவரால் முதல் சிகிச்சை அளிக்கப்பட்டதாம்.

கழகக் கூட்டம்

★

அய்யம்பேட்டை (தஞ்சை)

27—1—56 மாலை 6 மணிக்கு சினிமா கொட்டகை மைதானத்தில்

தலைவர்: ஆர். எஸ். மூத்துசாமி

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

அலாவுதீன்

சென்னை 40-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

26—1—56 காலை 9½ மணிக்கு கிளைக் கழக இல்லத்தில் (எண் 39, லால்பேகம் தெரு, சேப்பாக்கம்) கிளைச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். வரவு - செலவுக் கணக்குகள், மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து முடிவு செய்யப்படும்.

புயல் நிவாரண நிதி

26—1—56 காலை 10 மணிக்கு புயல் நிவாரண நிதிக்காக சென்னை, பெரம்பூர் மகாலட்சுமி தியேட்டரில், திரு. வி. க. மறுமலர்ச்சி மன்ற நிதிக் குழுவினரால் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் தலைமையில் 'நிரபராதி' தமிழ்ப்படக் காட்சி நடைபெறும். தோழியர் ஜி. கஸ்தூரி அவர்களின் இன்னிசை ஒலிபரப்பப்படும். தோழர் என். வி. நடராசன் அவர்களிடம் புயல் நிவாரண நிதி அளிக்கப்படும்.

யார் ஆண்டால்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டால் டாக்டரிடம் வழிவகையறிந்து குழந்தைகளைப் பெறுதீர்கள்.

"ஆணும்-பெண்ணும் சரிசமம் என்பது அறிவுடைமையல்ல; பெண்கள் தெய்வத்திற்குச் சமமானவர்கள்; அப்படியிருக்க, அவர்களை எப்படி நமக்குச் சமமாக்குவது?"

* * *

22-1-56 மாலை 4-மணியளவில் சாத்தூர் தமிழ்ச் சங்கத்தின் 41-வது ஆண்டு நிறைவு விழா, திரு பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அவர்தம் உரையில், தமிழ்நாட்டில் செயல்முறையில்லாமல் பேச்சுதான் வளர்ந்திருக்கிறதென்றும், தமிழ்நாடு செயலில் இறங்கியிருந்தால் கேவலமான நிலையில் இருக்காது என்றும் கூறினர்.

எத்தனை காலம்தான்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரிடமும் 12 அணா வாங்கிக்கொண்டு! பின், சொக்கிதார்களிடம் ஆளுக்கு ரூ 50 'டெபாசிட்' வாங்கிக்கொண்டு பலரை நியமித்தாராம்! பின்னர், 13-நாட்களுக்குப் பிறகு இப்படி வசூல் செய்த தொகையுடன் அவர் கம்பிநீட்டிவிட்டாராம்!

'இலவச'ப் பள்ளிகள் இரண்டும் இப்போது மூடிக்கிடக்கின்றனவாம்; போலீசார் அந்த ஏமாற்றுக்காரரைத் தேடியலைகின்றனராம்!

மறைவு

நமது 'அறிவகம்' ஊழியர் தோழர் தனபால் அவர்களின் மனைவியார் செல்லம்மாள் 20—1—56ல், செங்கம் (வ. - ஆ.) நகரில் இயற்கை எய்திய செய்தியறிய மிக வருந்துகிறோம். அவருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கோள்கிறோம்.

(ஆ. - ர்.)

****

மாபெரும் பொதுக்கூட்டம்

29—1—56 ஞாயிறு மாலை 6 மணிக்கு சிதம்பரம் நகர மண்டப மைதானத்தில்

தில்லை-வில்லாளன்

தலைமையில் நடைபெறும்

★

அண்ணா,

பொதுச்செயலாளர் **இரா. நெடுஞ்செழியன்,**

துணைப் பொதுச்செயலாளர் **என். வி. நடராசன்**

மற்றும்

பொதுக்குழு உறுப்பினர் பலரும் கலந்துகொள்ளுவர்

****

****

திராவிட மாணவர் முன்னேற்ற கழக அமைப்புக் குழு

ஜன. 28-ந் தேதி

அண்ணாமலை நகரில்

நடைபெறும்

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் குழு, தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்தையடுத்த அண்ணாமலை நகரிலுள்ள மணியகாரர் தோப்பு அண்ணா அகத்தில், 28—1—56 சனிக்கிழமையன்று மாலை 3-மணிக்கு நடைபெறும்.

சிறப்பு அழைப்பின்பேரில் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களும் கலந்துகொள்ளுகிறார்கள்.

அமைப்புக் குழு, திராவிட மாணவர் முன்னேற்றக் கழக எதிர்கால வளர்ச்சிபற்றிய பல பிரச்சினைகள் குறித்து விவாதித்து முடிவு செய்ய இருக்கிறது.

'அறிவகம்'
இராயபுரம்,
சென்னை-13

டி. கே. பொன்னுவேலு,
அமைப்பாளர்,
திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

****

புது மாநில அமைப்பில்...

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

தாக அறிவித்தனர். குழுவினரின் தீர்ப்பால் அநீதி இழைக்கப்பட்ட மக்கள் கொதித்தெழுந்ததும், 'மண்டல மன்றங்கள்' அமைக்கப் போவதாகப் பேசினர். அந்த மண்டல மன்றங்களின் உருவம் வரையறுக்கப்படுமுன்பே, வேறு பல மாற்றங்களுடன், 'இதுதான் எங்கள் தீர்ப்பு' என்றனர்—அந்தப் பெரிய மனிதர்கள்!

பின்னர், அந்தத் தீர்ப்பு, இந்தியாவின் பல பகுதிகளிலும் கொந்தளிப்பை உண்டாக்கியதுடன் நில்லாது, 'பெரிய மனிதர்'கள் என்பதால் தங்களுக்குப் பெரும் செல்வாக்கு உண்டு என்று நினைத்துக் கிடந்த நெஞ்சங்களில் தீமூட்டவும் செய்தது. கொதித்தெழுந்த பகுதிகளில், பெரிய மனிதர்களின் 'ஒற்றுமை' உபதேசங்கள், 'ஐக்கிய போதனை'கள், 'ஏக இந்தியா', 'நவ பாரதம்' என்ற வாதங்கள் எல்லாம் வெறும் 'செல்லாக் காசு'களாகிவிட்டன. இதைக் கண்டதும், 'இந்திய ஒற்றுமை'யைக் காப்பாற்ற இரு மொழி மாநிலங்கள் அமைக்கப் போகிறோம்; இதோ, மேற்கு வங்கமும்—பீகாரும் இணைவதைப் பாரீர்'—என்று பேசுகின்றனர்.

இப்படி நாளொரு யோசனையும், பொழுதொரு திட்டமுமாக டெல்லியார் கூறிவரும் போக்கை என்னென்று அழைப்பது? இதில் விசேடமெல்லாம், ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதமான திடீர் திட்டங்களைக் கூறும்போதும், அந்த அந்தத் திட்டங்கள்தான் 'இந்திய ஒற்றுமையை', 'ஏக இந்திய ஐக்கிய'த்தைக் காப்பாற்றவல்லவை என்று பேசுகிறார்கள். மறுகணமே வேறொரு திட்டம் தரும்போது, நேற்றுக் கூறிய திட்டத்திற்கு வியாக்கியானம் செய்தது போலவே செய்கிறார்கள்—இது 'ஒற்றுமை'யை நிலைநாட்டவல்லது, என்று! எந்தத் திட்டம்தான் 'ஒற்றுமை'யைக் காப்பாற்றவல்லதோ?

16 மாநிலங்கள் என்பதை இனி எட்டு மாநிலங்களாக்கிவிடப் போகிறார்களாம்; அதாவது, இரு மொழிகள் அல்லது மூன்று மொழிகள் வழங்கும் பகுதிகளை ஒன்றுசேர்த்து மாநிலம் அமைக்கப்போகிறார்களாம். திட்டத்தைத் திடீரெனப் பண்டித பந்த், பிரதமர் நேரு பண்டிதரின் ஒப்புதல் பெற்று வெளியிட்டிருக்கிறார்.

கேரளம்—தமிழ்நாடு—கர்நாடகம் இணைந்த 'தட்சிணப் பிரதேசம்' என்று ஒரு மாநிலம் அமையுமாம்; ஆந்திராவும்—ஒரிசாவும் இணைந்து ஒன்று; பம்பாயைத் தலைநகராகக்கொண்டு மராட்டியம்; குஜராத்—இராஜஸ்தான் இணைந்து ஒன்று; மத்தியப் பிரதேசம் - (திட்டமிட்டபடி); உத்திரப் பிரதேசம்—பஞ்சாப் இணைந்து ஒன்று; பீகார்—வங்கம்—அசாம் இணைந்து ஒன்று என, எட்டு மாநிலங்கள் அமையுமாம். இவை குறித்து எல்லா மாநில முதன் மந்திரிகளுக்கும் தகவல் அனுப்பப்பட்டுவிட்டதாம்.

"தட்சிணப் பிரதேசம் அமைப்பதற்கு நான் ஒப்பவில்லை" என்று முதலமைச்சர் காமராசர் தெரிவித்திருக்கிறார்.

'நான் ஒன்றும் சர்வாதிகாரி அல்ல—என் சகாக்களைக் கலந்தாலோசிக்காமல் முடிவு கூறுவதற்கு'—என்று பேசியிருக்கிறார், சென்னை திரும்பியதும்!

மற்ற மாநிலங்கள் தட்சிணப் பிரதேசத் திட்டத்தை ஒப்புக்கொள்வதென்றாலும், மக்களின் ஒப்புதலும் திட்டத்திற்கு வேண்டும் என்றாராம், அவர்.

ஆச்சாரியார், தனது யோசனை திட்டமாக்கப்படுவதைக் கண்டு இரட்டை மகிழ்ச்சியுற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

தமிழ் நாட்டில் உள்ள முற்போக்குவாதிகள் எல்லாம் 'தட்சிணப் பிரதேசம்' என்ற திட்டத்தை எதிர்க்கின்றனர் என்று தெரியவருகிறது.

திருமணம்

★

26—1—1956-ல், சென்னை கோடம்பாக்கம் கெங்கையம்மன் கோவில் வீதியில், தோழர் வ. சங்கரநாராயணன் அவர்கள் தலைமையில் தோழர் இளமதி—தோழியர் மனோன்மணி திருமணம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், இளம்பரிதி, கிருட்டிணமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.